(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 444.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2015 மாச்சு 20, வெள்ளிக்கிழமை, பி.ப. 1.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4792/ '14

1.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— நெடுஞ்சாலைகள், உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1994, 2005 மற்றும் 2013 ஆம் ஆண்டளவில் நாட்டில் காணப்பட்ட ஆடைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) 2005 தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தினுள் குருணாகல் மாவட்டத்தில் தாபிக்கப்பட்டிருந்த ஆடைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் தாபிக்கப்பட்டுள்ள ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களின் நலன்புரிக்காக அரசாங்கம் ஏதேனும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றதா என்பதையும்:

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4822/ '14

2.

கௌரவ புத்திக பதிரண,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தின், மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டத்தில் அமைந்துள்ள கடை அறைகள் மற்றும் வாகன தரிப்பிடம் கொள்வனவாளர்களுக்கு வழங்கப்படுகையில் கேள்விப்பத்திரம் கோரல் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) கேள்விப்பத்திரம் கோரப்படவில்லையெனில், அவை வழங்கப்பட்ட முறையியல் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே குறிப்பிட்டுள்ளதன்படி கேள்விப்பத்திரம் கோரப்பட்டிருப்பின், கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் ஒவ்வொரு விண்ணப்படிவத்திலும் குறிப்பிடப்பட்டிருந்த பணத்தொகை தனித்தனியாக உள்ளடக்கப்பட்ட பட்டியலொன்றை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டத்தில் அமைந்துள்ள கடை அறைகள் மற்றும் வாகன தரிப்பிடங்களின் தற்போதைய உரிமையாளர்களின் பெயர்கள், முகவரிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொருவரும் கடை அறைகள் மற்றும் வாகன தரிப்பிடங்களை எவ்வளவு பணத் தொகைக்கு பெற்றுக்கொண்டுள்ளனர் என்பதையும் தனித்தனியாகவும்

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5436/ '14

3.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சியப் முனையத்திற்கு சொந்தமான முத்துராஜவெல தாங்கித் தொகுதிக்காக இறக்குமதி செய்யப்பட்ட டீசலின் கந்தக சதவீதம் எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கம்பஹா மாவட்டத்தில் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் விற்பனைக்குள்ள லங்கா ஒடோ டீசல் மற்றும் சுப்பர் டீசலிலுள்ள கந்தக சதவீதம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) கம்பஹா மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு லங்கா ஒடோ டீசல் மற்றும் சுப்பர் டீசல் எந்த பெற்றோலியக் களஞ்சிய முனையத்திலிருந்து வழங்கப்படுகின்றது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5692/ '14

4.

கௌரவ அனுர திஸாநாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கமக்காரர் ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்வதற்கு பூர்த்திச்செய்ய வேண்டிய தகைமைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உடுகிந்த, மெதவெல, கரகஹஉல்பத்த எனும் முகவரியில் வசிக்கும் திருமதி யஸவதி குமாரிஹாமி ஜயசுந்தர கமக்காரர் ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்வதற்கு கமத்தொழில் மற்றும் கமநல சேவைகள் காப்புறுதிச் சபையில் பதிவு செய்துள்ளாரா என்பதையும்;

(ii) இவர் கமக்காரர் ஓய்வூதியத்தை பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளாரா என்பதையும்;

(iii) இவர் அதற்கான தகுதியை பெற்றிருப்பின், இற்றை வரை இவருக்கு கமக்காரர் ஓய்வூதியம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5863/ '15

5.

கௌரவ சாந்த பண்டார,— வீடமைப்பு, சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது சமூர்த்தி நிவாரணம் வழங்கப்படுகின்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒரு குடும்பத்துக்கு வழங்கப்படும் நிவாரணங்களின் பெறுமதி யாது;

(iii) 2015ஆம் ஆண்டில் மேற்படி பணத்தொகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

(iv) ஆமெனில், இதன் பிரகாரம் அதிகரிக்கப்படும் பணத்தொகை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5876/ '15

6.

கௌரவ லலித் திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநர் யார் என்பதையும்;

(ii) மேற்கூறப்பட்ட நபருக்கு இலங்கையில் பிரசாவுரிமை உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இவர் இலங்கைப் பிரசாவுரிமையைப் பெற்றுக் கொண்ட திகதி யாது என்பதையும்;

(iv) இவர் இலங்கைப் பிரசையல்ல எனின், இவருக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை வகிக்கும் ஆற்றல் உள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5877/ '15

7.

கௌரவ அருந்திக்க பெர்னாந்து,— உள்நாட்டலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மிக நீளமான கடற்கரை பிரதேசம் உரித்தான புத்தளம் மாவட்டத்தில் மீன்பிடித் துறைமுகமொன்று அல்லது மீன்பிடி இறங்குதுறை ஒன்று தாபிக்கப்படவில்லை என்பதையும்;

(ii) கடந்த அரசாங்கம் சமர்ப்பித்த 2013/2014 வரவுசெலவுத்திட்டப் பிரேரணைகளில் வென்னப்புவை பிரதேசத்தில் மீன்பிடித் துறைமுகமொன்றை நிர்மாணிப்பதற்கான பிரேரணையொன்று உள்ளடக்கப்பட்டிருந்தது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணைக்கு அமைய, வென்னப்புவை பிரதேசத்தில் மீன்பிடித் துறைமுகமொன்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மீன்பிடித் துறைமுகத்தின் நிர்மாணிப்புக்கள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி மீன்பிடித் துறைமுகத்தை நிர்மாணிப்பதில்லை எனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5891/ '15

8.

கௌரவ லசந்த அலகியவன்ன,— நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டினுள் காணப்படுகின்ற சுத்தமான குடிநீர் வசதியுடன் கூடிய வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) நாட்டிலுள்ள மொத்த வீடுகளில் குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கையின் சதவீதம் யாதென்பதையும்;

(iii) குடிநீர் வசதி வழங்கப்படவேண்டியுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இவ்வீடுகளுக்கு குடிநீர் வசதிகளை வழங்குதல் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் தீர்மானம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5895/ '15

9.

கௌரவ கீதாஞ்சன குணவர்தன,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அவிஸ்சாவளை தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளின் பெயர்கள் மற்றும் அவற்றின் பராப்பளவு வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) பாதுக்க பிரதேச செயலாளர் பிரிவில், ஹல்பேவத்த, மின் விசிதுருகம கிராமத்தில் மக்கள் வசிக்கும் காணிகளின் உரிமையை ஒழுங்குமுறைப்படுத்தித் தருமாறு குறிப்பிட்ட மக்கள் முன்வைக்கும் கோரிக்கைக்கு இணங்குகின்றனரா என்பதையும்;

(iii) ஆமெனில், குறிப்பிட்ட காணிகளுக்கு உறுதிகள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவிஸ்சாவளை தேர்தல் தொகுதியில் பாதுக்க பிரதேச செயலாளர் பிரிவில், தம்போர கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள 10 ஏக்கர் காணி, கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் பிரதேச மக்களுக்கு பகிர்ந்தளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்தக் காணிகளை காணிக் கச்சேரி மூலம் அந்தப் பிரதேச மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4793/ '14

10.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— நெடுஞ்சாலைகள், உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள முழுமொத்த பட்டதாரிகளில் வெளிவாரிப் பட்டதாரிகளின் எண்ணிக்கை மற்றும் உள்வாரிப் பட்டதாரிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அரசாங்கப் பல்கலைக்கழகங்களில் ஓர் ஆண்டினுள் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) க.பொ.த (உயர் தர) பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட திகதி தொடக்கம் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுதல் வரை எடுக்கும் கால எல்லை யாதென்பதையும்;

(iv) தற்போது மேற்படி கால எல்லை ஓராண்டுக்கும் மேலான கால எல்லையாக மாறியுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(v) இந்த நிலைமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) க.பொ.த (உயர் தர) பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் மிக விரைவாக பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான ஏதேனும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4823/ '14

11\.
கௌரவ புத்திக பதிரண,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கடற்படையினால் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்கள் கடற்படையின் சிரேஷ்ட அதிகாரிகளின் தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்;

(ii) இவ்வாகனங்களுக்கான எரிபொருள் அரசாங்கத்திலிருந்து பெறப்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வாடகை அடிப்படையில் பெறப்பட்ட சொகுசு வாகனங்களை சிரேஷ்ட அதிகாரிகளின் தனிப்பட்ட பாவனைக்குப் பயன்படுத்துவதற்கு இலங்கை கடற்படையினதும் பாதுகாப்பு அமைச்சினதும் இணக்கப்பாடு பெறப்பட்டுள்ளதா;

(ii) இன்றேல், மேற்படி வாகனப் பாவனை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iii) அவ்விசாரணையின் பெறுபேறு யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5693/ '14

12\.
கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 04 வருட காலத்தினுள் இலங்கை வெளிநாடுகளுக்கு அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கிய நிதிசார்ந்த மற்றும் ஏனைய உதவிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிதிசார்ந்த மற்றும் ஏனைய உதவிகள் எவ்வாறான தேவைகளுக்காக வழங்கப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி நிதியுதவிகளுக்கான நிதி மற்றும் ஏனைய உதவிகள் எவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5864/ '15

13\.
கௌரவ சாந்த பண்டார,— மக்கள் ஒழுங்கு, அனர்த்த முகாமை கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது நாட்டில் தாபிக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி பொலிஸ் நிலையங்களில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) அலவ்வ பொலிஸ் நிலையமும் நவீனமயமாக்கலுக்கு உள்ளாக்கப்பட வேண்டியுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) குறைபாடுகளுடன் கூடிய பொலிஸ் நிலையங்களை நவீனமயமாக்குவதற்கு அல்லது புதிதாக நிர்மாணிப்பபதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5892/ '15

14\.

கௌரவ லசந்த அலகியவன்ன,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014.01.01 ஆம் திகதியளவில் நாட்டினுள் இருந்த சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி குடும்பங்களுக்கு கிடைக்கின்ற ஒவ்வொரு மாதாந்த நிவாரணத் தொகை வகுதிகளின்படி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வகுதியின் கீழ் சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட நிவாரணங்களும் உள்ளடங்கலாக கிடைக்கின்ற ஒவ்வொரு மாதாந்த நிவாரண வகுதியின்படி 2015 சனவரி 31 ஆம் திகதியளவில் இருந்த சமுர்த்தி பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வகுதியின் கீழ் குறித்த நிவாரணம் வழங்குவதற்கு செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நூறு நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப்பட்டவாறான வரவு செலவுத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள நிவாரணங்களும் உள்ளடக்கப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு மாதாந்த நிவாரண வகுதியின் கீழ் சமுர்த்தி நலன்பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி ஒவ்வொரு வகுதியின் கீழ் சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்கு மாதாந்தம் செலவாகின்ற பணத்தொகை

வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1\.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 1),— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2011.04.07 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

2\.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 2),— 7(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2015 மாச்சு மாதம் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சபை அமர்வு தினமாக இருக்குமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.3),— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், 2015 மாச்சு மாதம் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 முதல் பி.ப. 6.30 வரை இருக்குமாக. பி.ப. 6.30 மணிக்கு மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 4),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2015 மாச்சு மாதம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.12.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

மின்வலு, எரிசக்தி அமைச்சர்.— இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் கீழ் மின்வலு, சக்தி அமைச்சரால் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் பேரில் மின்சார (அனுமதிப்பத்திரம் தொடர்பில் விண்ணப்பித்தலும் விலக்களிப்பும்) தொடர்பில் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 10 ஆம் திகதிய, 1883/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

உள்நாட்டு போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 7.

காணி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 10.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

11.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

12.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

16.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17.

இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.